பெயர்: ..... தேதி: .....

மனம் திருந்திய மரம் வெட்டி

நல்லூர் மிகவும் அழகான கிராமம். அக்கிராமத்திற்கு செல்லும் வழியில் பெரிய ஆலமரம் இருந்தது. ஆலமரத்தில் பலவிதமான பறவைகள் கூடு கட்டி வாழ்ந்து வந்தன. அப்பறவைகளுள் பச்சைக்கிளியும் ஒன்று. அது எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்கும்.

ஒருநாள் அந்த வழியாக புதிதாக ஒருவன் வந்தான். அவனது கண்ணில் மரம் பட்டது. “அடடா!... எவ்வளவு! பெரிய மரம். நல்ல வைரம் பாய்ந்த மரமாக இருக்கிறதே!.. இந்த மரத்தை வெட்டினால் நம் ஆயுளுக்கும் கவலை இல்லாமல் இருக்கலாம்.” என்று கூறினான். இதைக்கேட்ட பச்சைக்கிளி மிகவும் வருத்தமடைந்தது.

தனது நண்பனின் சோகத்தைக் கண்ட குரங்கு, உனக்கு என்னவாயிற்று? என்று கேட்டது. கிளி நடந்ததை விவரமாகக் கூறியது. “சரி.... நான் ஏதாவது முயற்சி செய்து பார்க்கிறேன்.” என்று வேகமாக மரம் வெட்டுபவனின் வீட்டிற்குச் சென்றது. அங்கே மரம் வெட்டுபவனின் குழந்தைகள் மணல் வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்தனர். குரங்கு மணல் வீட்டை இடித்து நாசப்படுத்தியது. குழந்தைகள் ஹோ...வென அழுதனர். இதைப்பார்த்த மரம் வெட்டி கோபத்துடன் குரங்கை அடிக்க ஓடினான். குரங்கு வேகமாகத் தாவி பச்சைக் கிளி இருந்த மரத்தை அடைந்தது.

நில்லுங்கள் ஐயா! எதற்காக குரங்கைத் துரத்துகிறீர்? என்று கிளி கேட்டது ‘என் குழந்தைகள் ஆசைஆசையாய் விளையாடிய மணல் வீட்டை இந்த குரங்கு நாசமாக்கிவிட்டது. இரு உன்னை என்ன செய்கிறேன் பார்! ஐயா! நில்லுங்கள்! திரும்ப கட்டக்கூடிய மணல் வீட்டிற்கே கோபப்படும் தாங்கள்.... நாங்கள் இவ்வளவு காலம் வாழ்ந்த மரத்தை வெட்ட நினைத்தீர்களே! நியாயமா? கிளியின் பேச்சைக் கேட்ட மரம் வெட்டி உண்மையை உணர்ந்து மரம் வெட்டும் தொழிலைக் கைவிட்டான்.

பெயர்: ..... தேதி: .....

பயிற்சிகள்

I, வினாக்களுக்கேற்ற விடையளி:

1. பறவைகள் கூடு கட்டி வாழ்ந்த மரம் எது?

2. 'வைரம் பாய்ந்த மரம்' என கூறியது யார்? மரத்தின் பெயர் என்ன?

3. பச்சைக்கிளி ஏன் சோகமாக இருந்தது?

4. குரங்கு என்ன செய்ததாக மரம் வெட்டி கூறினார்?

5. திரும்ப கட்டக் கூடியது எது?

II, கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. மிக அழகான கிராமம் _____

2. கிளியின் நண்பன் _____

III, சேர்த்து எழுதுக:

1. அ + கிராமம் =

2. அ + பறவை =

Iv, எதிர்ச்சொல்:

1. கிராமம் x

2. ஒன்று x

3. பெரிய x

4. பள்ளம் x

V, திறன் அறிதல்:

1. உங்களுக்குத் தெரிந்த மரங்கள் மற்றும் பறவைகளின் பெயர்களை எழுதுக?.

2. பறவைகள் மற்றும் விலங்குகளின் வாழிடங்களை நினைவுபடுத்துக.